Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 69 | வியாழக்கிழமை Thursday | 08.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஆன்மிக பெரியவர்கள் விரும்பும் கட்சி தி.மு.க.

## திண்டுக்கல்லில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேச்சு



திண்டுக்கல்: அதிமுக கூட்டணிக்கு வாக்களித்தால் பாஜக தான் தமிழகத்தை ஆளும் என நாங்கள் சொல்லி புரியவைக்க வேண்டியதில்லை, என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.1595 கோடியில் 111 முடிவுற்ற திட்டபணிகளை திறந்துவைத்து, 212 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: திண்டுக்கல் புரட்சியின் பெயர், எழுச்சியின் பெயர், வீரத்தின் பெயர். வரலாற்றை புரட்டிப்பார்த்தால் பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக போராடிய வேலுநாச்சியார், ஊமைத்துரையும் தங்கள் அடுத்த கட்ட போராட்டத்திற்கு திட்டமிட்ட ஊர் தான் வீரத்தின் விளைநிலமாக உள்ள திண்டுக்கல்.

கம்பீரம் காட்டிய திப்புசுல்தான், ஹைதர்அலி நடமாடிய இடம் திண்டுக்கல். மருதுபாண்டியர், கோபாலநாயக்கர், ஊமைத்துரை மூவரும் சேர்ந்து நான்காயிரம் வீரர்களை திரட்டி போரிட்டு வாழ்ந்த திண்டுக்கல் மாவட்டத்தில் உங்களை சந்திப்பதில் பெருமையடைகிறேன்.

எங்களை பொறுத்தவரையில் இது ஐபி மாவட்டம். (அமைச்சர் ஐ.பெரியசாமி). திண்டுக்கல் பூட்டு எவ்வளவு உறுதியானதோ அதே அளவிற்கு உறுதியுடன் இந்த மாவட்டத்தை கட்டிக்காத்து வளர்ச்சியை நோக்கி அழைத்துச் சென்றுகொண்டிருக்கிறார் அமைச்சர் ஐ.பெரியசாமி. அதேபோல் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணியும் சிறப்பாக செயல்பட்டுவரும் அமைச்சர்களில் ஒருவராக இருக்கிறார். அதனால் தான் தொடர் வெற்றிக்கு சொந்தக்காரராக இருக்கிறார்.

அதிமுக ஆட்சியின் 10 ஆண்டுகாலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு ஒரு கோடி 79 லட்சத்து 81 ஆயிரத்து 152 மெட்ரிக் டன். ஆனால் நமது திராவிட மாடல் ஆட்சியில் நான்கரை ஆண்டுகளில் ஒரு கோடியே 99 லட்சத்து 75 ஆயிரத்து 710 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்துள்ளோம்.

அதிமுகவின் பத்து ஆண்டுகளை விட, ஐந்து ஆண்டுகளில் 19 லட்சம் 94 ஆயிரத்து 588 மெட்ரிக் டன் அதிகமாக கொள்முதல் செய்துள்ளோம். இது மிகப்பெரிய சாதனை. இந்த சாதனைக்கு சொந்தக்காரர் தான் அமைச்சர் அர.சக்கரபாணி. நகரங்களுக்கு இணையாக கிராம ங்களின் உட்கட்டமைப்பு வளரவேண்டும். இந்த சமச்சீரான வளர்ச்சி தான் நம்முடைய திராவிட மாடல் இலக்கணம். திண்டுக்கல் மாவட்டத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மூலம் 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படுகிறது. இதில் 6915 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே திண்டுக்கல் மாவட்டத்தில் தான் அதிகப்படியான பட்டாக்களை வழங்கி வருகிறோம்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு 8 புதிய அறிவிப்புக்களை வெளியிடுகிறேன்.

* திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் சாலை, தெருவிளக்கு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் ரூ.14.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும். * திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாளசாக்கடை ரூ.8 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

*பழநி இடும்பன்குளம், சண்முகாநதி ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். *நத்தம் கலை அறிவியல் கல்லூரிக்கு ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்படும்.

* அதிகளவில் முருங்கை பயிரிடப்படும் ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள மார்க்கம்பட்டியில் உலக தரத்திலான முருங்கை ஏற்றுமதிக்கான பதப்படுத்தும் தொழிற்சாலை ரூ.7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

*கொடைக்கானல் செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு 100 ஏக்கர் பரப்பில் அனைத்து உட்கட்டமைப்புகளையும் உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா முதலீட்டு பூங்கா வில்பட்டி ஊராட்சி பகுதியில் அமைக்கப்படும்.

*கண்ணுவலி கிழங்கு பயிர் உற்பத்தியில் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது. இதற்கு நிலையான நியாயமான விலை கிடைக்க மத்திய அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். *ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ரூ.18 கோடி செல்வில் புதிய கழிவுநீர் கால்வாய் அமைக்கப்படும். திண்டுக்கல் மாவட்டம் மட்டும் அல்ல ஒவ்வொரு மாவட்டத்திற்கு என்னென்ன தேவைகள் வேண்டும் என தேடி செய்கிறோம். 2026 புத்தாண்டு பிறந்தது முதல் புதிய திட்டங்களை அறிவித்துள்ளோம். அரசு ஊழியர்களின் உறுதியளிப்பு ஓய்வூதியத்திட்டத்தை செயல்படுத்த ஆணையிட்டுள்ளேன். பொங்கலுக்கு ரூ.3000, அரிசி, சர்க்கரை, கரும்பு, வேட்டி, சேலைகள் வழங்கவும் ஆணையிட்டுள்ளேன்.

'உலகம் உங்கள் கையில்' என்றதிட்டத்தை துவங்கிவைத்து பத்து லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் 2019 ம் ஆண்டு பழனிசாமி முதல்வராக இருந்தபோது, மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை நிறுத்திவிட்டார். சிஏஜி அறிக்கையில், வாங்கப்பட்ட 55 ஆயிரம் லேப்டாப்களை வீணடித்துவிட்டார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதுகுறித்து பழனிசாமிக்கு சந்தேகம் இருந்தால் 2023ம் ஆண்டு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் ஆதாரம் உள்ளது. மக்கள் நலனுக்காக நாம் செய்யக்கூடிய திட்டங்களை குறைசொல்ல க்கூடியவர்கள், இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி குளிர்காயலாம் எனநினைக்கின்றனர். அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தமிழ்நாட்டுக்கு வந்தார். அவர் அமித் ஷாவா அல்லது அவதூறு ஷாவா என சந்தேகம் உள்ளது. உண்மைக்கு புறம்பாக பேசிவிட்டுச் சென்றுள்ளார்.

தமிழகத்தில் இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறை ளுக்கு முடிவுகட்டும் வகையில் தமிழ்நாடு செயல்படுகிறது எனப் பேசியுள்ளார். இதற்கான கடுமையான கண்டனங்களை இந்த விழாவின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு சுமார் 4 ஆயிரம் கோயில்களுக்கு குடமுழுக்கு செய்துள்ளோம். இப்படிப்பட்ட சாதனையை பாஜக ஆளும் மாநிலங்களில் செய்துள்ளனரா, கண்டிப்பாக இல்லை.

அதுமட்டுமல்ல 997 கோயில்களுக்கு சொந்தமான 7 ஆயிரத்து 701 கோடி மதிப்பிலான 7655 ஏக்கர் நிலங்களை மீட்டுள்ளோம். இந்து சமய அறநிலையத்துறை சார்பில் என்னென்ன செய்துள்ளோம் என ஒரு நாள் முழுக்க பேசலாம். அதனால் தான் பக்தர்கள் விரும்பக்கூடிய ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி உள்ளது. அனைத்து மதத்தினரின் நம்பிக்கையை பாதுகாக்கும் ஆட்சியாக உள்ளது.

# பா.ம.க. தலைவர் அன்புமணியுடனான கூட்டணி வெற்றிக்கான அச்சாரம்; எடப்பாடி பழனிசாமி பேட்டி



சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், அதிமுக கூட்டணியில் பாமக இணைந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அதிமுக கூட்டணியை பலப்படுத்தும் முயற்சியில் இபிஎஸ் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அந்த வகையில் பாமகவுடனான கூட்டணி குறித்தும் அதிமுக பரிசீலித்து வந்தது.

இந்நிலையில், இன்று காலை சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இல்லத்துக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் சென்றார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும், பாமக தலைவர் அன்புமணியும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது இபிஎஸ் கூறியதாவது: ஏற்கெனவே அதிமுக - பாஜக கூட்டணி உறுதியாகிவிட்டது. இந்நிலையில் இந்தக் கூட்டணியில் பாமக இணைந்துள்ளது. இது இயற்கையான கூட்டணி. இந்தக் கூட்டணி அதிமுக - பாமக கட்சியினர், தொண்டர்கள் விரும்பியவாறு அமைந்துள்ளது. இது வெற்றிக் கூட்டணி.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் விரோத திமுக ஆட்சியை அகற்றவேண்டும் என்ற லட்சியத்தின் அடிப்படையில் ஒருவலிமையான தமிழகத்தை உருவாக்க, மக்களுக்கு தேவையான திட்டத்தை கொடுக்கும் அரசு அமைய எங்களது கூட்டணி 234 தொகுதிகளிலும் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று, அதிமுக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

அதிமுக, பாஜக, பாமக ஆகிய 3 கட்சிகளும் இணைந்து இரவு, பகல் பார்க்காமல் சுறுசுறுப்பாக செயல்பட்டு, மிகப்பெரிய வெற்றிபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன். தொகுதிகள் எண்ணிக்கை முடிவு செய்துவிட்டோம். மற்றவை பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு இபிஎஸ் கூறினார்.

இருப்பினும், பாமகவுக்கு 20 சட்டப்பேரவைத் தொகுதிகளையும், ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் ஒதுக்க அதிமுக முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

செய்தியாளர்களை சந்தித்த அன்புமணி ராமதாஸ்.

தொடர்ந்து அன்புமணி பேசியபோது, "வரும் சட்டப்பேரவை தேர்தலை அதிமுக தலைமையிலான கூட்டணியில் இருந்து சந்திக்கும் வகையில் இணைந்திருக்கிறோம். இது, எங்களுக்கு மகிழ்ச்சியான தருணம். எங்கள் தொண்டர்கள் எதிர்பார்த்த கூட்டணியில் நாங்கள் சேர்ந்து இருக்கிறோம். இது வலுவான கூட்டணி.

எங்களது நோக்கம் மக்கள் விரோத, ஊழல் செய்கிற, பெண்களுக்கு எதிரான, சமூக நீதிக்கு எதிரான திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதே. மிகப்பெரிய வெற்றியை நாங்கள் பார்த்து இருக்கிறோம்.

சமீபத்தில் 100 நாட்கள் நடைபயணம் மேற்கொண்டபோது கிராமப்புற மக்கள் திமுக மீது மிகுந்த கோபத்தில் இருப்பதை பார்த்தோம். தேர்தல் எப்போது வரும் என்று அவர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். உறுதியாக எங்களது கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும்." என்றார்,


## காலையில் உயர்ந்து மாலையில் குறைந்த தங்கம் விலை...!



தங்கத்தின் விலை நாளுக்குநாள் புதிய உச்சம் தொட்டு வருகிறது. குறிப்பாக கடந்த டிசம்பர் மாதம் ஒரு சவரன் தங்கம் ரூ. 1 லட்சத்தை கடந்தது. இது தங்க முதலீட்டாளர்களுக்கு அதிக லாபத்தை பெற்றுத்தந்தது. அதேவேளை நகை வாங்கும் நடுத்தர மக்களுக்கு அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

இதனிடையே, சென்னையில் இன்று காலை ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 320 உயர்ந்து ரூ.1,02,960க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் ரூ.40 உயர்ந்து ரூ.12,870க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல், வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.12,000 உயர்ந்து ரூ.2,83,000க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் வெள்ளி ரூ.12 உயர்ந்து ஒரு கிராம் ரூ.283க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், காலை அதிகரித்த தங்கம் விலை மாலை குறைந்துள்ளது. அதன்படி, சென்னையில் இன்று மாலை ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 560 குறைந்து ரூ.1,02,400க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ. 70 குறைந்து ரூ. 12, 800க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல், வெள்ளி விலையும் சற்று குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் இன்று மாலை வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.6,000 குறைந்து ரூ.2,77,000க்கு விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி கிராமிற்கு ரூ.6 குறைந்து ஒரு கிராம் ரூ.277க்கு விற்பனை செய்யப்பட்டது.

## வானிலை முன்னறிவிப்பு: தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களுக்கு கனமழை வாய்ப்பு



தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் நாளை (ஜன.9) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று அதே பகுதிகளில், சென்னைக்கு தென்கிழக்கே 1270 கிமீ தொலைவில் நிலைக்கொண்டுள்ளது.

இது நாளை (ஜன.9) வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக நாளை கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 9-ம் தேதி கடலோர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 10 மற்றும் 11 தேதிகளில் வடகடலோர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், இதர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 12-ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 13-ம் தேதி ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குருப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பொதுமக்கள் அனைவரும் புகையில்லா போகி பண்டிகையை கொண்டாட வேண்டும்

## மேயர் ஜெகன் பெரியசாமி வேண்டுகோள்




தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் வடக்கு மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் ஆணையா் ப்ரியங்கா, துணை மேயா் ஜெனிட்டா, மண்டலத்தலைவர் நிர்மல்ராஜ், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முகாமில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி பகுதியில் பல மாதங்களாக நடைபெற்று வருகின்றது. இதில் ஒவ்வொரு மண்டலமாக குறைதீர்க்கும் முகாம் நடைபெறுகிறது. இதில் பிறப்பு இறப்பு சான்றிதழ் குடிநீர் இணைப்பு பாதாள சாக்கடை கட்டிட அனுமதி உள்ளிட்ட அடிப்படை பணிகளுக்காக தொடங்கப்பட்ட இந்த பகுதிக்குட்பட்ட மண்டலக் கூட்டத்தில் இதுவரை 876 மனுக்கள் பெறப்பட்டதில் 868 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 8 மனுக்கள் பா்சிலனையில் உள்ளது.இங்குவந்துதான் மனு கொடுக்க வேண்டும் என்றகட்டாயம்கிடையாது மாநகராட்சி ஆன்லைனில் புகாா்கள் தொிவித்தாலும் அது சம்பந்தப்பட்ட அலுவலா்கள் உங்கள் இல்லத்திற்கே வந்து அதை சாி செய்து விடுவாா்கள். பொதுமக்களுக்கு எந்த தொந்தரவும் இல்லை. தமிழர் திருநாள் தை பொங்கலை முன்னிட்டு மாநகராட்சி மைய அலுவலகத்தில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற உள்ளது. இந்தாண்டு அனைத்து மண்டல அலுவலகங்களிலும் பொதுமக்களுடன் இணைந்து பொங்கல் விழா கொண்டாடப்பட உள்ளது. போகி பண்டிகைக்கு முன்னதாக டிசம்பர் 10,11சனி ஞாயிற்றுக் கிழமைகளில் மாஸ் கிளீனிங் நடைபெறும். அதில் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள வேண்டாத பொருட்களை எரிக்காமல் தூய்மைப் பணியாளா்களிடம் ஒப்படைக்க வேண்டும் நமது மாநகராட்சியை பொறுத்தவரை சுற்றுச் சூழல் மாசுபடுவதையும், சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதை தடுத்திடவும் "புகையில்லா போகி பண்டிகை" யைபொதுமக்கள் கொண்டாட வேண்டும் மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப மண்டல வாரியாக பணிகள் நடைபெற்று வருகின்றன பொங்கல் விடுமுறைக்கு முன்பாக அனைத்து பூங்காக்களும் புதுப் பொலிவுடன் சீரமைக்கப்பட்டு வருகிறது. புதிய பூங்காக்கள் அனைத்து மண்டலங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மண்டலத்தில்தனசேகரன் நகரில் உள்ள பூங்கா மற்றும் பிங் பார்க் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. எழில் நகரில் புதிய பூங்கா பணிகள் நடைபெறுகிறது இன்னும் ஒரு சில நாட்களில் அது நிறைவடையும். இளைஞர்களின் கோரிக்கையை ஏற்று ஆரோக்கியமான இளைய சமுதாயத்தை உருவாக்க மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் லூர்தம்மாள்புரம், ஸ்டேட் பேங்க் காலனி, ஹவுசிங் போர்டு பகுதியில் உடற்பயிற்சி கூடத்துடன் கூடிய சிறிய பூங்காக்கள் அமைக்கப்பட்டு வரு கிறது.மக்கள் குப்பைகளை தரம் பிரித்து கொடுக்க வேண்டும். அதுபோல பாதாள சாக்கடை திட்டத்தை மக்கள் முழுமையாக பயன்படுத்தும் பட்சத்தில் காண் கொசு தொல்லை, மற்றும் சாக்கடையில் இருந்து உருவாகும் சுகாதாரக்கேடுகளால் ஏற்படும் பல தொற்றுநோய்களை தடுக்கலாம். இதற்காக அரசாங்கம் அதிக நிதியை ஒதுக்கி பணிகள் நடைபெற்று வருகிறது. நகரின் முக்கிய ஓடையில் கழிவு நீர் கலப்பதை தடுப்பது குறித்து மாற்று முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பக்கிள் ஓடையில் வரும் காலங்களில் மழைநீர் மட்டுமே ஓட வேண்டும் அது நமது மாநகரின் சுகாதாரத்தை பாதுகாக்கும். தருவைகுளம் குப்பை கிடங்கில் 500 மரங்களை நட்டு ஆரம்பித்த பணிகள் இப்போது லட்சம் மரங்களை தாண்டி குறுங்காடுகளாக சுற்றுச்சூழலை பாதுகாத்து வருகிறது. ஏற்கனவே 20 குறுங்காடுகள் மாநகராட்சி சார்பில் உருவாக்கப்பட்டு பராமரித்து வருகிறோம். பொதுமக்களும் தங்கள் பங்குக்கு ஒவ்வொரு மரங்களை வளர்த்து சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்று பேசினாா்.

கூட்டத்தில் மாநகராட்சி நகர அமைப்பு திட்ட செயற்பொறியாளர் வேலாயுதம், உதவி செயற்பொறியாளர்கள் முனீர்அகமது, ராஜேஷ்கண்ணா, நகர்நல அலுவலர் சரோஜா, இளநிலை பொறியாளா் அமல்ராஜ், சுகாதார ஆய்வாளர்கள் ராஜசேகா், கண்ணன், வட்டச்செயலாளர் ரவீந்திரன், மாநகர் மாவட்ட காங்கிரஸ் மண்டலத்தலைவர் சேகா், ஆணையாின் நோ்முக உதவியாளர் துரைமணி, மேயாின் நோ்முக உதவியாளர் ரமேஷ், போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகா், ஜேஸ்பா் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தேவகோட்டை சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு எண்ணும் ,எழுத்தும் பயிற்சி கையேடு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. பள்ளி மாணவர்களுக்கு அரும்பு ,மொட்டு,மலர் பயிற்சி கையேடுகள் பள்ளிகளில் வழங்கப்பட்டது.தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் தேவகோட்டை வட்டார வளமைய மேற்பார்வையாளர் கார்த்திகேயன், பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் , பள்ளியின் பெற்றோர் ஆசிரியர்கழகஉறுப்பினர்கள்எண்ணும்எழுத்தும்பயிற்சிகையேடுகளைமாணவர்களுக்கு வழங்கினார்கள்.ஒன்றாம்வகுப்புமுதல்ஐந்தாம்வகுப்புவரைபுத்தகங்கள்மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.



மதுரை பெரியார் பேருந்து நிலையம் பகுதியில் சாலை பாதுகாப்பு மாத விழாவை முன்னிட்டு போக்குவரத்து துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது



# ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி போக்குவரத்துத்துறையின் சார்பில் தேசிய சாலைபாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு

## வாகன ஓட்டிகளுக்கு தலைக்கவசம் மற்றும் இருக்கை பட்டை அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்டம், குமரன் சாலை, (சம்பத் நகர்) கொங்கு கலையரங்கம் அருகில், (07.01.2026) நேற்று போக்குவரத்துத் துறையின் சார்பில் வாகன ஒட்டிகளுக்கு தலைக்கவசம் மற்றும் இருக்கை பட்டை அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்.

சாலை விபத்துகளையும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளையும் குறைக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு சாலைப்பாதுகாப்பு விதிமுறைகள் குறித்தவிழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஆண்டு தோறும் சாலைப் பாதுகாப்பு மாதம் நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டி ற்கான சாலைப் பாதுகாப்பு மாதம் ஜனவரி 01 முதல் 31 வரை அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, ஈரோடு மாவட்ட நிர்வாகத்தால் பொதுமக்களுக்கு சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த மாதம் முழுமைக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட போக்குவரத்துத் துறையால் பொதுமக்களுக்கு தலைக்கவசம் (Helmet) அணிவதன் அவசியம் மற்றும் சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இன்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், போக்குவரத்துறையின் சார்பில், தேசிய பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு தலைக்கவசம் மற்றும் இருக்கை பட்டை அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, ஈரோடு (கிழக்கு) (பொ) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஐ.ஷேஹ் முகமது, பெருந்துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ம.பூங்குழலி, ஈரோடு (மேற்கு(பொ) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ம.மாதவன், இயக்க ஊர்தி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (07.01.2026) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று மனு மீது விசாரணையை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

## கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பாக முதியவர்களுக்கு மதிய உணவு வழங்கிப்பட்டது

கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பாக தி மு க துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம் பியின் பிறந்த நாளையொட்டி, கோவை என்ஜிஜிஓ காலனி பகுதியில் உள்ள சாய் சௌந்தர்யம் மறுவாழ்வு மைய காப்பகத்தில் உள்ள முதியோர்க்கு மதிய உணவு வழங்கப்பட்டது. முன்னதாக கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ ரவி கேக்வெட்டி அனைவருக்கும் வழங்கி கொண்டாடினர். தி மு க துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம் பியின் பிறந்தநாளை தி மு க மகளிர் அணியினர் பல்வேறு இடங்களில் நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடி வருகிறனர்.



இதன் ஒரு பகுதியாக கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பாக தி மு க துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதியின் பிறந்த நாள் விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இதில் கோவை என் ஜி ஜி ஓ காலனி பகுதியில் உள்ள சாய் சௌந்தர்யம் மறுவாழ்வு மைய காப்பகத்தில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் டி வி ரங்கநாயகி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ ரவி தலைமை தாங்கி கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார். தொடர்ந்து காப்பகத்தில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வடை பாயசத்துடன் மதிய உணவு வழங்கினர்.

முன்னதாக இந்நிகழ்ச்சிக்கு வந்த மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ ரவிக்கு மகளி அணி சார்பாக சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் வனஜா, துணை அமைப்பாளர்கள் சங்கீத பிரியா, மேரி, நாகரத்தினம், சித்ரா, வசந்தாமணி, மாநில மகளிர் அணி துணை செயலாளர் உமா மகேஸ்வரி,ஒன்றியசெயலாளர் கார்த்திக், கலா சாந்தரம், செந்தில், மாவட்ட மகளிர் தொண்டர்அணிதலைவர்,துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகரம், பேரூர் கழகம் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



பெரும்பேர் கண்டிகை ஊராட்சியில், மதுராந்தகத்தில் உள்ள மாலோலன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பாக, 7 நாட்கள் சிறப்பு முகாம் துவங்கியது.

# கீழக்கோட்டையில் தேசிய பள்ளி சிறார் உடல் நலத் திட்டத்தின் சார்பாக மருத்துவ முகாம்




சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் தேசிய பள்ளி சிறார் உடல்நலதிட்டத்தின் சார்பாகமருத்துவமுகாம் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரையாற்றினார். மருத்துவர் சுதர்சன் மருத்துவர் வெங்கடேஸ்வரி மாணவ மாணவிகளின் உடல்நலன்களை பரிசோதித்து மருத்துவ அறிவுரைகள் வழங்கினர். தடுப்பூசி சேவைகள் நல குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்தல் மற்றும் பரிந்துரை செய்தல் கண்பார்வை குறைபாட்டினை கண்டறிந்து இலவசமாக கண் கண்ணாடிகள் வழங்குதல் வாராந்திர இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல் தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்குதல் மாதவிடாய் நாட்களில் சுகாதாரமான நாப்கின்கள் வழங்குதல் அயோடின் குறைபாடு பற்றி விழிப்புணர்வு அளித்தல் மற்றும் பரிசோதனை செய்து காண்பித்தல் நடத்தையில் மாற்றம் ஏற்படுத்துதல் புகையிலை இல்லா பள்ளி வளாகத்தை உறுதிப்படுத்துதல் டெங்கு போன்ற கொசுக்களால் பரவும் நோய்கள் பற்றி விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் பள்ளிகளில் சுகாதாரம் பேணுதல் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு சுகாதாரத்தை உறுதி செய்தல் வளரிளம் பருவ சேவையில் மாணவர்களின் பங்குகளை பற்றி எடுத்து கூறுதல் மனநல ஆரோக்கியத்திற்கான விழிப்புணர்வு தொற்ற நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்த விழிப்புணர்வு ஹீமோகுளோபின் குறைபாட்டிற்கான பரிசோதனை இவற்றையெல்லாம் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என்பதை தமிழ்நாடு அறிவியல் இயக்கமாவட்டத்தலைவர்ஆரோக்கியசாமிஎடுத்துக் கூறினார். செவிலியர்கள் லில்லி கிறிஸ்டி மஞ்சுளா மருந்தாளுநர்கள் சுகாசினி யாசர்அரபத் சிறப்பாக பணியாற்றினர். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா நன்றி கூறினார். ஆசிரியைகள் வாசுகி கமலம்பாய் ஓட்டுனர்கள் செல்வராஜ் மணிகண்டன் கலந்து கொண்டனர்.

# பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் ரொக்கத்தொகை ரூ.3000/ வழங்குவது தொடர்பாக புகார்கள் ஏதேனுமிருப்பின்

## 1967 மற்றும் 1800 425 5901 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களிலும் மற்றும் 04242 252052 எண்ணிலும் தெரிவிக்கலாம்

### ஈரோடு மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தகவல்



தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை எதிர்வரும் 15.01.2026 –ஆம் தேதியன்று சிறப்பாக கொண்டாடும் விதமாக பச்சரிசி 1கிலோ,சர்க்கரை 1 கிலோ மற்றும் முழுக் கரும்பு 1 ஆகியவற்றை உள்ளடக்கிய பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் ரொக்கத்தொகை ரூ.3000/– அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத்தொகை ரூ.3000/– பெறுவதற்கு பகுதி வாரியாக டோக்கன்கள் வழங்கப்பட்டு வருகிறது.டோக்கன்கள் பெற்ற குடும்ப அட்டைதாரர்கள் 08.01.2026 முதல் பொங்கல் பரிசுத் தொகுப்பினை பெற்றுக் கொள்ளலாம். இப்பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத்தொகை ரூ.3000/– வழங்குவது தொடர்பாக புகார்கள் ஏதேனுமிருப்பின் 1967 மற்றும் 1800 425 5901 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களிலும் மற்றும் 0424–2252052 தொலைபேசி எண்ணிலும் தெரிவிக்கலாம். மேற்காணும் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கத் தொகை ரூ.3000/–ஐ பெற்று குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



ஓமலூர் போக்குவரத்து சிக்னல் அருகே நேற்று நம்பர் பிளேட் இல்லாமல் சென்ற நூற்றுக்கணக்கான இருசக்கர வாகனங்களை போக்குவரத்து துறை காவலர்கள் அதிரடியாக வளைத்து பிடித்தனர். முறையான ஆவணங்களுடன் கூடிய வாகனங்களை மட்டும் நம்பர் பிளேட்வைக்கும்படிஎச்சரித்துஅனுப்பினர்.ஆவணங்கள் இல்லாத வாகனங்களுக்கு அபராதம் விதித்தனர். மேலும் இதுபோன்றநடவடிக்கைகள்தொடரும்எனபோக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருப்பரங்குன்றம் தீப விவகாரம்:

# மக்களின் எண்ணங்களுக்கேற்ற நியாயமான முறையில் தீர்ப்பு அமைந்திருக்கிறது அதை வரவேற்கிறோம்

### ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. பேட்டி



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட சிந்தாமணி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக சாலைகள் அமைக்கும் பணிக்கான பூமி பூஜையை போட்டு பணிகளை தொடங்கி வைத்தார் திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் ராஜன் செல்லப்பா தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறுகையில்:

சிந்தாமணி பகுதியில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி சாலை வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீதிபதி கொடுத்த தீர்ப்பைவிமர்சிப்பது ஒரு அமைச்சருக்கு அழகல்ல அமைச்சர் ரகுபதி அந்ததீர்ப்பைவிமர்சித்து இருக்கிறார் நீதியரசரை விமர்சித்தால் நீதியை மதிக்காமல் அவமரியாதைசெய்து கொண்டிருக்கிறார் சட்டத்துறை அமைச்சர்.

திருப்பரங்குன்றம் மக்கள் அமைதியாக சிறப்பாக எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அனைவருக்கும் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறோம் ஆனால் இந்ததிமுகஅரசுகாவல்துறை அறநிலைத்துறை மக்களை தடுக்கிறது ஏவி விடுகிறது.

முழுமையான பிரச்சனைக்கு முழுமுதற் காரணம் திமுக தான் மக்கள் அல்ல மதம் அல்ல தவறான நிர்வாகத்தால் இந்த பிரச்சனை மக்கள் மத்தியிலே வந்திருக்கிறது. திருப்பரங்குன்றம் தீர்ப்பை பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதை போல அதை நடைமுறைப்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். மக்களும் தயாராக உள்ளனர். நீதிமன்ற தீர்ப்பை முறியடிக்க இந்த அரசு குறிக்கோளாக உள்ளது. தீர்ப்புக்கு அடிபணிந்து செல்லும் உணர்வு கொஞ்சம் கூட இல்லை. அவர்கள் ஏற்றார் போல் தீர்ப்பு வந்தால் நீதிபதியை வரவேற்பதும் இல்லையென்றால் விமர்சிப்பதும் திமுகவின் வாடிக்கை

அவளுடைய எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் தீர்ப்பு வந்துள்ளது. மக்களின் எண்ணங்களைக் ஏற்ற இந்த தீர்ப்பு நியாயமாக வந்திருக்கிறது எனவே இந்த தீர்ப்பை நாங்கள் வரவேற்கிறோம் மேல்முறையாட்டிலும் இதே தீர்ப்பு தான் வரும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.



அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மற்றும் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் மதுரை மாவட்டம்,பாலமேடு ஜல்லிக்கட்டு திருவிழா 2026 முகூர்த்தக்கால் நடும் நிகழ்வு நடைபெற்றது.



கடலூர் மாவட்டம் திட்டக்குடி அரசு பெண்கள் மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் +1 மாணவர்கள் 339 பேருக்கு அரசின் விலையில்லா மிதிவண்டியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார். அப்போது இரு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அல்லி,ஜெய்சந்திரன் மற்றும் இருபால் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

## ஆ.பாளையம் கிராமத்தின் மையப்பகுதியில்

# நான்கு வழி சாலை விரிவாக்க பணிகளால் வாழ்வாதாரம் பாதிக்கும் அபாயம்

### அமைச்சர் சி.வெ. கணேசனிடம் ஆ. பாளையம் கிராமத்தினர் கோரிக்கை!



கடலூர் மாவட்டம் திட்டக்குடி அடுத்துள்ள ஆ. பாளையம் கிராமத்தின் மையப்பகுதியில் குடியிருப்புகள், அரசு பள்ளி மற்றும் மாரியம்மன் கோவில் அமைந்துள்ள நிலையில், அந்தப் பகுதியில் விபத்துகளைத் தவிர்க்கவும் வழிபாட்டுத் தலத்தைப் பாதுகாக்கவும் புறவழிச்சாலை அமைக்கக் கோரி தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் மாண்புமிகு சி.வெ. கணேசன் அவர்களிடம் நேற்று 07/01/2026 புதன்கிழமை கிராம மக்கள் மனு அளித்தனர்.

அந்த மனுவில், கூறியிருப்பதாவது, கிராமத்தின் மையப்பகுதியில் உள்ள மாரியம்மன் கோவிலை ஒட்டியே சாலை செல்வதால் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதோடு, பள்ளி மாணவர்கள் மற்றும் முதியவர்கள் அடிக்கடி விபத்துகளைச் சந்திப்பதாகவும் தற்போது நடைபெறும் நான்கு வழி சாலை விரிவாக்கப் பணிகளால் குடியிருப்புகள் மட்டுமின்றி வழிபாட்டுத் தலங்களும் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால், கிராமத்தைச் சுற்றியுள்ள ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்றி அதன் வழியாகப் புதிய புறவழிச்சாலை அமைத்துத் தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் கோரிக்கையை அக்கறையுடன் கேட்டறிந்த அமைச்சர் சிவெ.கணேசன் இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

# பாட்டாக்குறிச்சி பிரம்மா திருக்கோவிலின் கும்பாபிஷேகம் ஏப்.12 ல் நடைபெற உள்ளது

### விழாவில் ஜனாதிபதி முர்மு, பிரதமர் மோடி பங்கேற்க அழைப்பு



தென்காசி மாவட்டத்தில்கீழப்பாட்டாக்குறிச்சியில் அமைந்துள்ள பிரம்மா திருக்கோவிலின் கும்பாபிஷேகம் வருகின்ற ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி நடைபெறுவதாக கோவில் நிர்வாகி வழக்கறிஞர் பரம்மஸ்ரீ சரசந்திர போஸ் மற்றும் கோவில் ஒருங்கிணைப்பாளர் இசக்கிபாண்டியன் செய்தியாளர்களிடம் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கோவில் நிர்வாகி மற்றும்

கோவில் ஒருங்கிணைப்பாளர் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது.

தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பிரம்மா திருக்கோவில் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்று 9 ஆண்டுகள் முடிவடையும் நிலையில் தற்போது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி துவங்கப்பட்டு 12ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது ஒன்பதாம் தேதி காலை ஆலயத்தில் உள்ள 15 கும்பங்களுக்கும் தானியங்கள் நிரப்பும் நிகழ்ச்சி நடைபெறும், இத்திருக்கோவிலானது சத்தியம்வதா,தர்மம் சரா, அதிதி தேவோ பவ போன்ற நமது வேதகால சனாதன கொள்கை அடிப்படையில் இந்த கோயில் கட்டப்பட்டுள்ளது. பிரம்மலோகத்தில் கதவுகள் இல்லை துவார பாலகர்கள் இல்லை கதவுகள் திறப்பது அல்லது மூடுவதில்லை உண்டியல்கள் இல்லை ஆண்டு முழுவதும் 24மணி நேரமும் திறந்திருக்கும் எந்த வகையான தீண்டாமை இல்லை பணம் அல்லது மதிப்புமிக்க நன்கொடைகள் பிரம்மலோகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது.

இத்திருக்கோவிலின் பிரம்மலோகத்தின் 9 ஆவது வருஷாபிஷேக முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இந்திய திருநாட்டின் ஜனாதிபதி மற்றும் பாரத பிரதமரை விழா நடக்கும் நான்கு நாட்களில் ஏதேனும்ஒருநாளில்பிரம்மா திருக்கோவில் நடைபெறும்பிரம்மோற்சவத்தில் கலந்து கொள்ள அழைக்கின்றோம். அதற்கான பணிகள் ஏற்கனவே டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளன. வருகின்ற ஏப்ரல் 9 ,10, 11 மற்றும் 12ம் தேதிகளில் காலை 11:00 மணி முதல் மாலை 3 மணி வரையிலும் தொடர்ந்து நான்கு நாட்கள் அன்னதானம் நடைபெறும் அனைத்து பக்தர்களும் 2026 ஏப்ரல் 9 முதல் 12 வரை நடைபெறும் பிரம்மலோக பிரம்மோற்சவத்தில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல பஞ்சமுக பிரம்மாவின் ஆசிகளை பெற அன்புடன் அழைக்கின்றோம் என தெரிவித்துள்ளனர்.

# தொளசம்பட்டி சந்தைப் பேட்டை பஸ் நிறுத்தத்துக்கு 70 ,98 அரசு பேருந்து வராததால் பொதுமக்கள் அவதி



சேலம் மாவட்டம் தொளசம்பட்டி பேருந்து நிலையத்தில் 98 மற்றும் 70 நம்பர் கொண்ட அரசு பேருந்து சேலத்தில் இருந்து தொளசம்பட்டிக்கு வந்து செல்கின்றன இந்த பேருந்து தொளசம்பட்டி பேருந்து நிலையத்திலேயே நின்று விடுகிறது அதனால் பொதுமக்கள் பெரும் சிரம் அடைகின்றனர்.பேருந்து நிலையத்திலிருந்து 1/2 கிலோ மீட்டர் தொலைவில் சந்தைப்பேட்டை என்ற பஸ் நிறுத்தம் உள்ளது இதில் இந்த 98,70 நம்பர் அரசு பேருந்து இந்த சந்தப்பேட்டை பஸ் நிறுத்தத்திற்கு பஸ் இரண்டு ஆண்டுக்கு முன்பு வந்து கொண்டிருந்தது. தற்போது வருவதில்லை இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவ,மாணவிகள் மற்றும்அரசு வேலைக்குசெல்லும் ஊழியர்கள்,கூலி வேலைக்கு செல்லும் பொதுமக்கள் இவர்களெல்லாம் தொளசம்பட்டி சுற்றுப்புறத்தில் இருந்து பஸ் பயணம் செல்ல வருகின்றனர் இவர்களால் தொளசம்பட்டி பஸ் நிலையத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல இயலவில்லை இதனால் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.இந்த குறிப்பிட்ட நம்பர் அரசு பேருந்து தொளசம்பட்டி சந்தப்பேட்டை பஸ் நிறுத்தம் பகுதிக்கு இந்த அரசு பேருந்து வந்தால் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் கூலி வேலைக்குச் செல்லும் மக்கள்,அரசு ஊழியர்கள் பேருந்தில் பயணம் செய்து தங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு அவர்கள் செல்வதற்கு மிகவும் ஏதுவாகவும் குறிப்பிட்ட நேரத்தில் செல்லவும் உதவியாக இருக்கும் ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள 70,98 அரசு பேருந்து தொளசம்பட்டிசந்தைபஸ்ஸ்டாப்புக்குபஸ்வராததால் பொதுமக்கள் பெரிதும் சிரமம் அடைகின்றனர். இந்த இரண்டு அரசு பேருந்துகளும் தொளசம்பட்டி சந்தைப்பேட்டை நிறுத்தத்திற்கு வந்து செல்ல வேண்டும் என்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.

# எஸ்.ஆர்.எம்.வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகளின் விவசாயிகளுக்கான விவசாய பயிற்சி திட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் பாபுராயன்பேட்டையில் அமைந்துள்ளது எஸ்.ஆர்.எம்.வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி 4-ஆம் ஆண்டு மாணவியர்கள் கிராம வேளாண் பணித் திட்டத்தின்கீழ்,சூணாம்பேடு கிராமத்தில் விவசாயிகளுக்கான சிறப்பு விவசாய பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்த நிகழ்சியில் விவசாயிகளுக்கான சிறப்பு பயிற்சி நடைபெற்றது. இதில் எஸ்.ஆர்.எம். வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானிகள் செயல்விளக்கங்களின் மூலம் பயிற்சி வழங்கினர்.

நெல் பயிரில் பூச்சி கட்டுப்பாடு மற்றும் தேங்காய் தோட்டங்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து முனைவர்திரு.காமராஜ். டி விளக்கினார். மதிப்பு கூட்டல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை குறித்து முனைவர் திரு. பிரகாஷ். கே உரையாற்றினார். விவசாயத் திட்டங்கள் தொடர்பாக திரு. சியாம்சுந்தர் விளக்கமளித்தார். கால்நடைகளுக்கான உணவு மேலாண்மை குறித்து திரு. கார்த்திகேயன் செயல்விளக்கம் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

இன்நிகழ்ச்சியில் கிராம விவசாயிகள் மற்றும் சூணாம்பேடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு.ஜே.எஸ்.கண்ணன் ஆகியோர் முன்னிலையில், வேளாண்மைத் துறை சார்ந்த முக்கியமான உத்திகள், எஸ்.ஆர்.எம். வேளாண் மற்றும் அறிவியல் கல்லூரி கார்ல மார்க்ஸ் குழுவினரானா பா.புவனேஸ்வரி,த.நந்தினி,மு.சந்தியா,பு. நிவேதா,மு.வைதேகி,ர. புஷ்பா,கி.ஷ்ர்மிளா, செருகுரி அகல்யா,அர்பனாஜா,ச.சக்ஷனா ஆகியோரால் விளக்கம் மூலம் எடுத்துரைக்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகளின் சந்தேகங்கள் மற்றும் புதிய அறிவியல் உத்திகளையும், இந்த பயிற்சி விவசாயிகளுக்கு ஒரு பாலமாக அமைந்ததுடன், மாணவர்களுக்கு கள அனுபவத்தையும்வழங்கியது.




விருதாச்சலம் கொளஞ்சியப்பர் அரசு கலை கல்லூரியில் மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது இதில் கல்லூரியின் முதல்வர் முனியன் தலைமை தாங்கினார் புதுமைப்பெண் திட்ட ஒருங்கிணைப்பாளர் கண்ணகி முன்னிலை வகித்தார், இதில் சிறப்பு அழைப்பாளராக விருதாச்சலம் எம்எல்ஏ ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு கல்லூரியின் மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கி சிறப்புரையாற்றினார், முன்னதாக யூ எம் ஐ எஸ் தொடர்பு அதிகாரி ரமேஷ் வரவேற்றார், தமிழ் புதல்வன் ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் நன்றி கூறினார், பேராசிரியர் பிரியா விழாவை தொகுத்து வழங்கினார் மற்றும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவி லாவண்யா அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரை வழங்கினார்,இதில் துணைத் தலைவர்கள், பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள் கல்லூரியின் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் சக்தி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ குபேர சக்தி விநாயகர் திருக்கோவிலில் இன்று சங்கடகர சதுர்த்தி மிகச் சிறப்பாக நடைபெற்றது மேலும் குபேர விநாயகர்சிறப்புஅலங்காரத்தில்பக்தர்களுக்கு காட்சியளித்தார்.


இந்நிகழ்ச்சியை ஸ்ரீ குபேர விநாயகர் சேரிட்டபிள் டிரஸ்ட் அமைப்பினர் மிகச் சிறப்பாக செய்திருந்தனர் மேலும் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது மேலும் செவ்வாய்க்கிழமைகளில் வரும் சங்கடஹர சதுர்த்தி சிறப்பான ஒன்று. மகா சங்கடகர சதுர்த்தி என்று அழைக்கப்படுகிறது.

## உளுந்தூர்பேட்டையில் ரூ.5 மோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட

# 21 வகுப்பறை கொண்ட கூடுதல் பள்ளி கட்டிடத்தை மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் உள்ள அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடி மதிப்பில் 21 வகுப்பறை கொண்ட புதிய பள்ளி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது இதன் திறப்பு விழா இன்று நடைபெற்றது பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்சிவராஜ்தலைமையில் நடைபெற்ற விழாவில் சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி புதிய பள்ளி கட்டிடத்தை திறந்து வைத்து மாணவிகளுக்கு மலர்கள் கொடுத்து வகுப்பறையில் அமர வைத்தார். தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி களுக்கு பாராட்டு சான்று மற்றும் பதக்கங்களை வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் எந்த ஒரு சூழ்நிலையிலும் மாணவிகள் தங்களின் கல்வி பின்னோக்கி செல்லக்கூடாது எனவும் மாணவர்களின் கல்விக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அதனை பயன்படுத்திக் கொண்டு மாணவிகள் நல்ல முறையில் படித்து 100% தேர்ச்சி பெறுவதோடு அதிக மதிப்பெண்பெற்றுஎதிர்காலத்தில் மிகப்பெரிய பதவிகளுக்குவரவேண்டும் என்று அறிவுரை கூறினார்..



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் உள்ள அருள்மிகு சக்தி விநாயகர் கோவிலில் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு மார்கழி மாத சதுர்த்தி விழா நடைபெற்றது அப்பொழுது மூலவர் சக்தி விநாயகருக்கு அபிஷேகப் பொடி பால் தயிர் இளநீர் பஞ்சாமிர்தம் சந்தனம் மஞ்சள் உள்பட பல்வேறு வகையான வாசனை திரவங்கள் மூலம் சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது தொடர்ந்து மலர்களால் அலங்கரிக்கப் பட்ட சக்தி விநாயகருக்கு மகா தீபாராதனை நடைபெற்றது.

இதில் உளுந்தூர்பேட்டை பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை வணங்கினர்.

# நந்தா கல்வியியல் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான சிறப்பு விழிப்புணர்வு முகாம்



நந்தா கல்வியில் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான மத்திய மற்றும் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் இனிதே நடைபெற்றது. இம்முகாமினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் எஸ். பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் தமிழக அரசு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மாவட்ட நிரல் மேலாளர் முனைவர்எம்.சசிகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மேலும், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர்எஸ்.திருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு முகாமினை சிறப்பித்தார்கள். முன்னதாக, இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். பத்மா வரவேற்புரை நல்கினார்.

இதனைத் தொடர்ந்து. மாவட்ட நிரல் மேலாளர் முனைவர் எம். .சசிகுமார் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். அப்போது கூறுகையில், சிறு மற்றும் குறு நிறுவனங்கள் நடுத்தர நிறுவனங்கள் கடன் மற்றும் நிதி உதவி வழங்க மத்திய மற்றும் மாநில அரசால் மேற்கொள்ளும் திட்டங்கள், தொழில் முனைவோர் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது பற்றி மாணவ, மாணவிகளுக்குவிளக்கிதொழில் முனைவோர்மற்றும்சுய தொழில் செய்பவர்களுக்கு வழங்கப்படும் கடன்மற்றும்நிதி உதவிகள் பற்றியும் விளக்கிப் பேசினார்.இதில்மாணவ, மாணவிகள் வருங்கால தொழில்முனைவோராக உருவாவதற்கு இம்முகாம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள் என்பது குறிபபிடத்தக்கது.

நிகழ்வின் இறுதியில் நந்தா கல்வியியல் கல்லூரியின் உயிர் அறிவியல் துறை துணைப் பேராசிரியர் முனைவர் ஜெயக்குமார் நன்றியுரையாற்றினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (07.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நலத்துறையின் சார்பில், "பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற உறுதிமொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட சமூக நலஅலுவலர் சண்முகவடிவு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கோதை, குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் உமாமகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாநகராட்சி, கொங்கு கலையரங்கம் அருகில் (07.01.2026) போக்குவரத்துத்துறையின் சார்பில் தேசிய சாலைப்பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு தலைக்கவசம் மற்றும் இருக்கை பட்டை அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உட்பட பலர் உள்ளனர்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# திட்டக்குடி அருகே நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்



கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48-வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சி.வெ. கணேசன் அவர்கள் நேற்று 07/12/2026 புதன்கிழமை பொதுமக்களை நேரில் சந்தித்து குறை களைக் கேட்டறிந்தார்.

திட்டக்குடியை அடுத்த போத்திரமங்கலம், கொட்டாரம்,நெய்வாசல், ஆவினங்குடி மற்றும் பட்டூர் ஆகிய கிராமங்களுக்கு அமைச்சர் நேரில் சென்றார்.அங்குதிரண்டிருந்த பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட அவர்,குடிநீர் வசதி, சாலை வசதி, தெருவிளக்கு மற்றும் பட்டா தொடர்பான பிரச்சனைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தார்.

பின்னர் மக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் குறிப்பாக, நிலுவையில் உள்ள மக்கள் நலப்பணிகளை விரைந்து முடிக்கவும், அடிப்படை வசதிகளில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் அங்கிருந்து அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடும் விதமாக, ஏழை எளிய பெண்களுக்கு அமைச்சர்சி.வெ.கணேசன் அவர்கள் இலவச சேலைகளை வழங்கி புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.இந்நிகழ்ச்சியில், மங்களூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், திட்டக்குடி வருவாய் வட்டாட்சியர் உதயகுமார், திட்டக்குடி டிஎஸ்பி பார்த்திபன், மங்களூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சண்முக சிகாமணி (கிஊ), சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள், திமுக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



கொத்தமங்கலம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் புங்கம், மகோகனி, நாவல், மகிழம், என பல்வேறு வகையான மரக்கன்றுகள் சாலையோரங்களில் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வுமேற்கொண்டார்.

அதேபகுதியில்மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நாற்றுப்பண்ணை அமைக்கப்பட்டு 20,000 நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நாற்றுகளின் வகைகள், நாற்றுகளின் வளர்ச்சி, அவற்றின் பராமரிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பார்வையிட்டு தொடர்ந்து, கொத்தமங்கலம் ஊராட்சி முதல் உப்புப்பாளையம் வரை சாலையில் புதியதாக தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதை சாலையின் தரம், நீளம், அகலம் மற்றும் தடிமன் குறித்தும், சாலை அமைக்க பயன்படுத்தப்பட்ட கற்களின் அளவு மற்றும் மூலப்பொருட்களின் தரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக 107, பவானிசாகர், சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகத்தில் உதவி வாக்காளர் பதிவு அலுவலரின் விசாரணை நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அரசு அலுவலர்களுக்கான 72 வது பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்டம், பவானிசாகர்அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (06.01.2026) அன்று அரசு அலுவலர்களுக்கான 72- வது பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்.

இந்த பயிற்சி நிறுவனமானது 1972 ம் ஆண்டு தொடங்கப்பட்டு அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி- நேற்றைய தினம் 72 வது பயிற்சி தொடக்கப்பட்டு, இன்றை தினம் பயிற்சி வகுப்புகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அரசு பணியாளர்களுக்கான சட்டங்கள் மற்றும் வழிமுறைகள் அரசு அலுவலகங்கள் பணியாளர்களின் பணி முறை குறித்து பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சியின் மூலமாக அரசு நிர்வாகத்தை சிறந்த முறையில் பணி செய்ய பணியாளர்களுக்கு ஏதுவாக இருக்கும். இப்பயிற்சியில் 950 அரசுப்பணியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற உள்ளார்கள். 72-வது பயிற்சி வகுப்பானது இன்று முதல் தொடங்கப்பட்டு தொடர்ந்து 40 நாட்கள் நடைபெற உள்ளது. தொடர்ந்து, அரசு அலுவலர்களுக்கான, பவானிசாகர்அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் அலுவலர்களிடம் பயிற்சியினை முழுமையாக பெற்று, பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.மேலும்,அங்குள்ள நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, 5000-க்கும் மேற்பட்ட அரசாணைகள் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து கேட்டறிந்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் / பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய முதல்வர் சிவசுப்பிரமணியம் உட்பட துறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# சமூக நலத் துறையின் சார்பில், குழந்தை திருமணம் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்




ஈரோடு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (07.01.2026) சமூக நலத் துறையின் சார்பில், குழந்தை திருமணம் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் உறுதிமொழியான "எனது தாய் நாடாகிய தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரிக்க நான் உறுதுணையாக இருப்பேன். கருவில் வளரும் சிசுவின் பாலினத்தை எக்காரணம் கொண்டும் கண்டறியவோ, கருக்கொலை செய்யவோ முயல மாட்டேன். நானும் எனது உறவினர்களும் எனது கிராமத்தில்பெண் குழந்தைகள் பிறப்பிற்கும் அவர்களின் பாதுகாப்பிற்கும், கல்விக்கும், கண்டிப்பாக எவ்வித பாகுபாடின்றி சமமான மதிப்பு அளித்து உதவி செய்வோம். மேலும், குழந்தை திருமணத்தை தடுப்போம். எளிமையான திருமணங்களுக்கு ஆதரவு அளிப்போம். பெண் குழந்தைகளின் பெருமையை போற்றி எதிர்காலத்தில் பெண்குலம் தழைக்க செய்வோம் என்றும், உளமார உறுதி அளிக்கிறேன்"

என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும், பணியாளர்கள் மாணவ, மாணவியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.சண்முக வடிவு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கோதை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் உமா மகேஸ்வரி, அரசு அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோட்டைபுஞ்சை வனதுர்கை சித்தர் பீடத்தில் சித்தர் குருபூஜை விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள ஆட்டுப்பட்டி கோட்டைபுஞ்சை வனதுர்கை சித்தர் பீடத்தில் தவத்திரு வனதுர்கைசித்தர் 10ம் ஆண்டு குருபூஜை விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. ஆட்டுப்பட்டி கோட்டைபுஞ்சை வனதுர்கை சித்தர் குரு பூஜைவிழாமுன்னிட்டு காலை 9.05 மணிக்கு பால் அபிஷேகம் 9.30 மணிக்கு அன்னதானம் 11.00 மணிக்கு செவ்வாடை பக்தர்கள் திருக்கரங்களால் இருமுடி செலுத்துதல் பகல் 12.00 மணி முதல் 1.30 மணி வரை இராகு கால பூஜை மதியம் 1.00 மணிக்கு பக்தர்களுக்கு

அன்னதானம் 2.00 மணிக்கு வேள்வி பூஜை ஆரம்பம் 3.00 மணிக்கு நெய் அபிஷேகம் 4 மணிக்கு மஹா பூர்ணாஹூதி தொடர்ந்து மஹா தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி வனதுர்கை அடிகளார்

தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், புதுச்சேரி, மற்றும் உள்ளூர் வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் பங்கு பெற்று சுவாமி தரிசனம் செய்தனர். இவ் விழாவிற்கான ஏற்பாட்டினை ஆட்டுப்பட்டி கோட்டைபுஞ்சை வன துர்கை சித்தர் பீட நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.